Literacy for a Billion

Movie: Unnidathil Ennai Koduthen
Year: 1998

Song: Yetho Ooru Pattu
Lyricist: Palani Bharathi

ஏதோ ஒரு பாட்டு
என் காதில் கேட்கும்
கேட்கும் போதெல்லாம்
உன் ஞாபகம் தாலாட்டும்
ஏதோ ஒரு பாட்டு
என் காதில் கேட்கும்
கேட்கும் போதெல்லாம்
உன் ஞாபகம் தாலாட்டும்
என் கண்களின் இமைகளிலே
உன் ஞாபகம் சிறகடிக்கும்
நான் சுவாசிக்கும் மூச்சினிலே
உன் ஞாபகம் கலந்திருக்கும்
ஞாபகங்கள் மழையாகும்
ஞாபகங்கள் குடையாகும்
ஞாபகங்கள் தீ மூட்டும்
ஞாபகங்கள் நீரூற்றும்
ஏதோ ஒரு பாட்டு
என் காதில் கேட்கும்
கேட்கும் போதெல்லாம்
உன் ஞாபகம் தாலாட்டும்
கவிதை என்றாலே
உன் பெயரின் ஞாபகமே
கேட்கும் இசை எல்லாம்
நீ பேசும் ஞாபகமே
பூக்களின் மேலே
பனித்துளி பார்த்தால்
முகப்பரு ஞாபகமே
அதிர்ஷ்டம் என்றதும்
உந்தன் மச்சம் ஞாபகம்
அழகு என்றதும்
உந்தன் முத்தம் ஞாபகம்
ஏதோ ஒரு பாட்டு

என் காதில் கேட்கும்
கேட்கும் போதெல்லாம்
உன் ஞாபகம் தாலாட்டும்
தென்றல் என்றாலே
உன் வாசல் ஞாபகமே

வசந்தம் என்றாலே
உன் வருகை ஞாபகமே
தொட்டால் சுருங்கி
பார்த்தால் உந்தன்
வெட்கம் ஞாபகமே
அலைகள் போலவே
மோதும் உந்தன் ஞாபகம்
மறந்து போனதே
எனக்கு எந்தன் ஞாபகம்
ஏதோ ஒரு பாட்டு
என் காதில் கேட்கும்
கேட்கும் போதெல்லாம்
உன் ஞாபகம் தாலாட்டும்
என் கண்களின் இமைகளிலே
உன் ஞாபகம் சிறகடிக்கும்
நான் சுவாசிக்கும் மூச்சினிலே
உன் ஞாபகம் கலந்திருக்கும்
ஞாபகங்கள் மழையாகும்
ஞாபகங்கள் குடையாகும்
ஞாபகங்கள் தீ மூட்டும்
ஞாபகங்கள் நீரூற்றும்
ஏதோ ஒரு பாட்டு
என் காதில் கேட்கும்
கேட்கும் போதெல்லாம்
உன் ஞாபகம் தாலாட்டும்

Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.

PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.